தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 17-11-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 12-வது துணைவேந்தராக மீண்டும் முனைவர். கு. இராமசாமி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்த முனைவர் கு.இராமசாமி அவர்களின் பதவிக்காலம் கடந்த ஆகஸ்டு 26ந் தேதியுடன் நிறைவுற்றது. அதனையடுத்து தமிழக ஆளுநர் அவர்கள் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தர் பரிந்துரைக்கு, முன்னாள் ஊழல் கண்காணிப்புத் துறை இயக்குனர் திரு. வேதநாயகம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் குழு அமைத்து உத்தரவிட்டார். அந்த குழு கடந்த அக்டோபர் 12ம் தேதி வரை துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்ப'களை வரவேற்றிருந்தது.

இந்நிலையில், குழுவின் பரிந்துரையின்பேரில் கோவை வேளாண் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு முனைவர் கு. இராமசாமி அவர்களை மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு துணைவேந்தராக நியமித்து, தமிழக ஆளுநர் கே. ரோசய்யா அவர்கள் உத்தரவு பிறப்பித்ததையடுத்து, முனைவர் கு. இராமசாமி அவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் 12வது துணைவேந்தராக இன்று (17-11-2015) பொறுப்பேற்றார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்